**2022–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு வடலூர் நகராட்சி அலுவலகத்தில் அவசரக்கூட்டம் நகர்மன்ற தலைவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்க்காணும் பொருள்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.**

**முன்னிலை : திரு. சு. சிவக்குமார், நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி.**

**<u>பொருள் எண். 19</u>**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், **15**வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டடு 2022- 2023 முதலாம் அரையாண்டு **(01.04.2022)** முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு **3** வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.**52** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி**4)** துறை நாள் **30.03.2022** மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.**40032/2012/**ஆர்**1**, நாள்.**01.04.2022** ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| **பரப்பளவு (ச.அடி)** | **உயர்வு செய்வதற்கானகாரணி** |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.50 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2.00 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2.00 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டிடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் **வடலூர்** நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| **வ.எண்** | **செலவின வகைப்பாடு** | **தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி ( Current Liabilities) (ரூ. கோடியில்)** |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | **0.50** |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விவரம் | **0.25** |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விவரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | **–** |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வுக்கால பணப்யன், ஒய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | **1.00** |
| **மொத்தம்** | | **1.75** |

இந்நகராட்சியினை பொருத்துவரை மேற்தெரிவிக்கப்பட்டவாறு கட்டடங்கள் அமைந்துள்ள இடம் கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு மண்டல மதிப்பு இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 255/2008 நாள் 31.03.2008ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| மண்டலம் | 1 சதுர அடிக்கு ( ரூபாய்) | மொத்த ஆண்டுமதிப்பில் சொத்துவரி விகிதம் |
|---|---|---|
| A | 0.70 | 10 % |
| B | 0.50 | |
| C | 0.30 | |

| வ. எண் | தற்போதய மண்டலம் | பழைய பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 255 நாள் 31/03/2008 ன்படி அடிப்படை மதிப்பு ஒரு சதுர அடிக்கு மண்டல மதிப்பு | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி) / உபயோகம் | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு |
| 1 | A | 0.70 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 0.88 |
| | | | 601–1200 | 1.5 | 1.05 |
| | | | 1201–1800 | 1.75 | 1.23 |
| | | | >1801 | 2 | 1.40 |
| | | | வணிகம் | 2 | 1.40 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 1.23 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 1.23 |
| 2 | B | 0.50 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 0.63 |
| | | | 601–1200 | 1.5 | 0.75 |
| | | | 1201–1800 | 1.75 | 0.88 |
| | | | >1801 | 2 | 1.00 |
| | | | வணிகம் | 2 | 1.00 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 0.88 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 0.88 |
| 3 | C | 0.30 | குடியிருப்பு | | |
| | | | <=600 | 1.25 | 0.38 |
| | | | 601–1200 | 1.5 | 0.45 |
| | | | 1201–1800 | 1.75 | 0.53 |
| | | | >1801 | 2 | 0.60 |
| | | | வணிகம் | 2 | 0.60 |
| | | | தொழிற்சாலை | 1.75 | 0.53 |
| | | | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 0.53 |

## <u>காலிமனை வரி சீராய்வு:</u>

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு **இரண்டு மடங்கிற்கு மேல்** உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து **காலிமனை வரி** வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும். அதற்கான மண்டல மதிப்பு கீழ்க்கண்டவாறு

| வ. எண் | தற்போதய மண்டலம் | ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பு | புதிதாக நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்பு |
|---|---|---|---|
| 1 | A | 0.20 பைசா | 0.40 பைசா |
| 2 | B | 0.20 பைசா | 0.40 பைசா |
| 3 | C | 0.20 பைசா | 0.40 பைசா |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், வடலூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

9) நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை கடித ந.க.எண்.38279/ELE/2006/–2 நாள். 01.02.2008 மற்றும் வட:லு;ா நகராட்சி 2008 –ம் ஆண்டில் சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்ட மன்ற தீர்மானம் எண். 255/2008 நாள் 31.03.2008ன்படி மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம். 10எனவும் ,

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்த மற்றும் செய்யால் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யப்படுகிறது.

## ஏற்கனவே தீர்மானத்தில் உள்ள தெருக்கள்

| வரிசை எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | சொத்துவரி மண்டலம் | காலிமனைவரி மண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | **1** | பூசாலிக்குப்பம் | C | C |
| 2 | **1** | ரோட்டு பூசாலிக்குப்பம் | C | C |
| 3 | **1** | பூசாலிக்குப்பம் எஸ்.ஐ.எல் காலனி | C | C |
| 4 | **1** | கமலாம்பாள் நகர் | B | B |
| 5 | **1** | பாரதிதாசன் தெரு | B | B |
| 6 | **1** | பண்ருட்டி ரோடு கிழக்கு தெரு | B | B |
| 7 | **1** | நந்தனார் நகர் | C | C |
| 8 | **1** | ராமமூர்த்தி ரெட்டியார் நகர் | B | B |
| 9 | **2** | வடக்கு தெரு ஆபத்தாரணபுரம் | C | C |
| 10 | **2** | திருவள்ளுவர் நகர் | C | C |
| 11 | **2** | மாரியம்மன் கோயில் தெரு | C | C |
| 12 | **3** | தெற்கு தெரு ஆபத்தாரணபுரம் | C | C |
| 13 | **3** | கக்கிளர் தெரு | C | C |
| 14 | **3** | சின்ன காலனி | C | C |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | **3** | பெரிய காலனி | C | C |
| 16 | **3** | கக்கிளர் தெரு (அம்போத்கார் நகர்) | C | C |
| 17 | **3** | சின்ன கோவில் குப்பம் | C | C |
| 18 | **3** | கஞ்சமநாதபுரம் காலனி | C | C |
| 19 | **4** | இளவரசன்பட்டு தெரு ஆபத்தாரணபுரம் | C | C |
| 20 | **4** | பொட்டவெளி தெரு | C | C |
| 21 | **4** | பாட்டை தெரு | C | C |
| 22 | **4** | பழைய இபி ஆபிஸ் ரோடு அமுதம் தெரு | B | B |
| 23 | **4** | பக்தா நகர் ஆபத்தாரணபுரம் | B | B |
| 24 | **4** | நெய்சர் பள்ளி தெரு | B | B |
| 25 | **5** | கோவிந்தசாமி நகர் | B | B |
| 26 | **5** | பண்ருட்டி மெயின் ரோடு | B | B |
| 27 | **6** | வஊசி நகர் 1முதல் 5வது தெரு | B | B |
| 28 | **6** | பண்ருட்டி ரோடு மேற்கு (கலைஞர் நகர்) | B | B |
| 29 | **6** | ஓம் சக்தி நகர் | B | B |
| 30 | **6** | பிச்சை பிள்ளை தெரு | B | B |
| 31 | **6** | செட்டியார் காலனி | B | B |
| 32 | **6** | ஜெயப்பிரியா நகர் | B | B |
| 33 | **6** | தென்குத்து சாலை | B | B |
| 34 | **7** | காட்டுக்கொல்லை | C | C |
| 35 | **7** | வானவில் நகர் | C | C |
| 36 | **8** | என்.எல்.சி ஆபிஸர் நகர் 1 முதல் 9 வது தெரு | B | B |
| 37 | **8** | முருகேசன் சாலை | B | B |
| 38 | **8** | சேஷாயி நகர் வடக்கு | B | B |
| 39 | **8** | அன்னை தெரசா சாலை (ஜெயபால் நகர்) | B | B |
| 40 | **9** | சேஷாயி நகர் | B | B |
| 41 | **9** | அம்மன் கோயில் தெரு | B | B |
| 42 | **9** | ரைஸ்மில் தெரு வடக்கு பகுதி | B | B |
| 43 | **9** | ரைஸ்மில் தெரு தெற்கு பகுதி | B | B |
| 44 | **9** | ராகவேந்திரா சிட்டி | B | B |
| 45 | **10** | சேராக்குப்பம் வடக்கு 1 முதல் 5வது தெரு | B | B |
| 46 | **10** | சேராக்குப்பம் மேற்கு 1 முதல் 4வது தெரு | B | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 47 | **10** | சேஷாயி நகர் | B | B |
| 48 | **10** | நெத்தனாங்குப்பம் | C | C |
| 49 | **11** | எஸ்.ஐ.எல் 1 முதல் 6 வது தெரு | B | B |
| 50 | **11** | பிள்ளையார் கோயில் 1 முதல் 5வது தெரு | B | B |
| 51 | **11** | சென்னியப்பன் ரைஸ்மில் தெரு | B | B |
| 52 | **11** | சென்னியப்பன் ரைஸ்மில் தெரு(பண்ருட்டி ரோடு) | B | B |
| 53 | **11** | பால்கார காலனி | B | B |
| 54 | **12** | எஸ்.ஐ.எல் வடக்கு தெரு (யூனியன் பிளாட்) | B | B |
| 55 | **12** | காமராஜ் நகர் | B | B |
| 56 | **12** | கணபதி நகர் | B | B |
| 57 | **13** | சர்வோதயா நகர் (காட்டுக்கொல்லை) | C | C |
| 58 | **13** | வேலுடையான் பட்டு தெரு | C | C |
| 59 | **13** | பூமிதானம் 1 வது தெரு (காட்டுக்கொல்லை) | C | C |
| 60 | **13** | பூமிதானம் 2 வது தெரு | C | C |
| 61 | **13** | பூமிதானம் 3வது தெரு | C | C |
| 62 | **13** | ஆசிரியர் நகர் | C | C |
| 63 | **13** | வாகீசம் பிள்ளை தெரு (நகர்) | B | B |
| 64 | **14** | ஜோதி நகர் | B | B |
| 65 | **14** | சாந்தி நகர் | B | B |
| 66 | **14** | இண்டஸ்ட்டீரியல் எஸ்டேட் தெரு | B | B |
| 67 | **14** | வள்ளலார் நகர் 1 முதல் 8வது தெரு | B | B |
| 68 | **15** | ஆஸ்பிட்டல் தெரு | B | B |
| 69 | **15** | இந்திரா நகர் | C | C |
| 70 | **16** | சீனிவாச ரெட்டியார் தெரு | B | B |
| 71 | **16** | போஸ்ட் ஆபிஸ் தெரு | B | B |
| 72 | **16** | பெருமாள் சொட்டியார் தெரு | B | B |
| 73 | **16** | ஆழ்வார் நகர் | B | B |
| 74 | **16** | இராஜமாணிக்கம் நகர் | B | B |
| 75 | **16** | முத்துரெட்டியார் தெரு | B | B |
| 76 | **16** | சோமசுந்தரம் நகர் | B | B |
| 77 | **16** | இரயில்வே ஸ்டேஷன் ரோடு | B | B |
| 78 | **17** | புது நகர் 1 வது தெரு | B | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 79 | **17** | புது நகர் 2வது தெரு | B | B |
| 80 | **17** | புது நகர் 3 வது தெரு | B | B |
| 81 | **17** | புது நகர் 4 வது தெரு | B | B |
| 82 | **17** | புது நகர் 5 வது தெரு | B | B |
| 83 | **17** | முருகானந்தா ஆசிரமம் | B | B |
| 84 | **18** | கிராஸ் ரோடு வடக்கு 1 முதல் 11 வது தெரு | A | A |
| 85 | **18** | புதுநகர் (இஎஸ்ஐ தெரு) | A | A |
| 86 | **19** | எம்ஜிஆர் நகர் | C | C |
| 87 | **19** | கிராஸ் ரோடு வடக்கு | A | A |
| 88 | **19** | கிராஸ் ரோடு வடக்கு | C | C |
| 89 | **20** | ஆர்கே மூர்த்தி நகர் (கலியபெருமாள் சாலை) | B | B |
| 90 | **20** | தெற்கு கிராஸ் ரோடு | B | B |
| 91 | **20** | செல்லியம்மன் கோயில் தெரு | C | C |
| 92 | **20** | ஞானபிரகாசம் தெரு | C | C |
| 93 | **20** | எம்கேகே நகர் | C | C |
| 94 | **20** | தோமையார் நகர் 5 முதல் 8வது தெரு | C | C |
| 95 | **21** | சீத்தாராம் நகர் | B | B |
| 96 | **21** | கோழிபள்ளம் நகர் | B | B |
| 97 | **21** | தருமசாலை வீதி | B | B |
| 98 | **21** | தெற்கு கிராஸ் ரோடு (கும்பகோணம் சாலை) | A | A |
| 99 | **21** | நெய்வேலி மெயின் ரோடு (தெற்கு) | A | A |
| 100 | **21** | செவன்த்டே பள்ளி தெரு | B | B |
| 101 | **22** | கோட்டக்கரை நாயுடு தெரு | B | B |
| 102 | **22** | கோட்டக்கரை வன்னியர் தெரு | B | B |
| 103 | **22** | மாருதி நகர் | B | B |
| 104 | **23** | தெற்கு தெரு | C | C |
| 105 | **23** | ஞானசபை தெரு | C | C |
| 106 | **23** | அம்மன் கோயில் தெரு | C | C |
| 107 | **23** | வடக்கு தெரு 2 முதல் 4 வது தெரு | C | C |
| 108 | **24** | 1 வது வடக்கு தெரு, வடக்கு தெரு | C | C |
| 109 | **24** | அம்மன் கோயில் தெரு | c | c |
| 110 | **24** | கல்பட்டு ஐயா நகர் | B | B |
| 111 | **24** | முத்துகுமாரசாமி நகர் | B | B |
| 112 | **25** | நடேசனார் நகர் | C | C |
| 113 | **25** | சவேரியார் நகர் 1வது தெரு | C | C |
| 114 | **25** | சவேரியார் நகர் 2,3,4வது தெரு | C | C |
| 115 | **25** | சின்ன காலனி வடக்கு தெரு | C | C |
| 116 | **25** | சின்ன காலனி மிடில் தெரு | C | C |
| 117 | **25** | சின்ன காலனி தெற்கு தெரு | C | C |

| | | | | |
|---|---|---|---|---|
| 118 | **25** | கும்பகோணம் சாலை | C | C |
| 119 | **26** | தோமையர் நகர் **1** முதல் **4**வது தெரு | C | C |
| 120 | **26** | மனமகிழ்மன்ற தெரு | C | C |
| 121 | **26** | மனமகிழ்மன்ற தெரு **1,2** வது தெரு | C | C |
| 122 | **26** | வண்ணாரபேட்டை தெரு | C | C |
| 123 | **26** | செபாஸ்ட்டியர் தெரு | C | C |
| 124 | **26** | அந்தோணியர் தெரு | C | C |
| 125 | **27** | தச்சர் தெரு | C | C |
| 126 | **27** | சேராக்குப்பம் **1**வது நரிக்குறவர் தெரு | C | C |
| 127 | **27** | சேராக்குப்பம் **1,2**வது சகாயமாதா தெரு | C | C |
| 128 | **27** | சேராக்குப்பம் **1**வது சவேரியர் தெரு | C | C |
| 129 | **27** | சேராக்குப்பம் **1**வது அம்மன் கோயில் தெரு | C | C |
| 130 | **27** | சேராக்குப்பம் ரோட்டு தெரு | C | C |
| 131 | **27** | வெங்கட்டங்குப்பம் **1** முதல் **6** வது தெரு | C | C |

**அலுவலக குறிப்பு :—**

**அ .** சொத்துவரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம். நகராட்சி நிர்வாக இயக்குநர், சுற்றறிக்கை ந.க.எண். 40032/2021/ஆர்1, நாள் 01.04.2022ன் படி 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொதுசீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ஆ.** பொதுமக்களுக்கு சொத்துவரி சீராய்வு குறித்து இரண்டு தினசரி தமிழ் நாளிதழிலும் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழிலும் அறிவிப்புகள் செய்திடவும், அரசிதழில் வெளியிடுவதற்கும் ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 19**

**அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண். 20

வடலூர் நகராட்சியில் வசூல் செய்யப்பட்டு வரும் சொத்துவரி, நூலகவரி வசூல் செய்யப்பட்டு பொதுநிதி வங்கி கணக்கிலேயே செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியாக செயல்பட்டு வருவதால் நகராட்சி மண்டல இயக்குநர் அறிவுரையின்படி சொத்துவரி வசூலின் போது கல்விவரி, குடிநீர் கட்டணம் மற்றும் நூலக வரி ஆகியவைகள் சேர்த்து வசூல் செய்து இதற்கு தனித்தனியாக வங்கி கணக்குகள் துவங்கப்பட்டு வசூல் தொகை இருசால் செய்ய அறிவுறுத்தியதன்படி தனி கணக்குகள்

துவங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு. மேலும், சொத்துவரியில் 10 சதவிதம் நூலகவரியும், மற்றும் 5 சதவிகிதம் கல்விவரியும் நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண். 20**

**அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண். 21

வடலூர் நகராட்சியில் 26.03.2022ம் தேதி மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையில் வள்ளலார் சர்வதேச நிலையம் அமைத்தல் மற்றும் வடலூர் நகராட்சி வளர்ச்சி பணிகள் தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்திற்கு செலவிடப்பட்ட செலவினத் தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மானம் எண். 21**

**அனுமதிக்கப்படுகிறது.**

(ஒப்பம்) சு. சிவக்குமார்,
நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி.